சுதந்திர தின வரவேற்பு விழாவில் விருதுகள் வழங்கப்பட்ட விவரம்

### கொடிநாளின் முக்கியத்துவம்

முதலாம் உலகப்போருக்குப் பின் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 11ம் நாள் ‘போர் நிறுத்த நாள்’ ஆக கொண்டாடப்பட்டு வந்தது. அந்நாளில் அடையாளக் கொடிகள் விற்பனையின் மூலம் பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டப்பட்டு அத்தொகை முன்னாள் போர்ப் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களின் நலம் பேணிட பயன்படுத்தப்பட்டதால், ‘எழுச்சி நாளாகவும்’ அனுசரிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப்பின், 1949–லிருந்து உயிர்த் தியாகம் செய்தோரையும், வீரர்களையும் போற்றி வணங்கிட ‘கொடி நாளை’ ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் அனுசரித்திட பாதுகாப்பு அமைச்சக குழுவினால் 28 ஆகஸ்ட் 1949 அன்று தீர்மானிக்கப்பட்டது. ஆக, நமது தேசிய வாழ்வில் கொடி நாள் பழைமையும், கௌரவமும் மிக்க ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.

## கொடிநாள் நிதி வசூல் – சுழற் கேடயம் வழங்குதல்

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு பல்வேறு மானியங்கள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்குவதற்காக பொது மக்களிடமிருந்து அரசுத் துறை அலுவலகங்கள் மூலமாக படைவீரர் கொடிநாள் நிதி வசூல் பெறப்பட்டுவருகிறது. படைவீரர் கொடிநாள் நிதி வசூல் செய்தலிலும் அதேபோல், இந்நிதியிலிருந்து அதிக எண்ணிக்கையில் முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவிகள் / மானியங்கள் வழங்குவதிலும் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

மக்கள் தொகை எண்ணிக்கை வீதத்தில் அதிக வசூல் செய்தலில் அகில இந்திய அளவில் தமிழகம் 1985 முதல் 1997 வரையிலும் அதன் பின்னர் 2004 ஆண்டு முதல் தொடர்ந்து முன்னணியில் இருந்ததுடன் இதற்கான கேடயமும் பெற்று வந்துள்ளது. மேலும், அகில இந்திய அளவில் அதிக பட்ச வசூல் செய்த மாநிலமாக 1986ம் ஆண்டு முதல் 1991 வரையிலும் 1997 முதல் 2000 ஆண்டு வரையிலும் முன்னிலை வகித்து வந்தது.

கொடிநாள் நிதி வசூல் செய்தலில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களை ஊக்குவிக்கும் விதமாக, தமிழக அரசும் மாநில அளவில் சதவீத அடிப்படையில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடிக்கும் மாவட்டங்களுக்கு சுழற் கோப்பையையும், அதிக பட்ச வசூல் செய்திடும் மாவட்டத்திற்கு சிறப்பு கேடயமும் வழங்கி கவுரவித்து வருகிறது.

07.12.2008 முதல் 06.12.2009 வரையிலான படைவீரர் கொடிநாள் 2008 நிதி வசூல் செய்தலில் சிறந்த மாவட்டங்களுக்கு தற்போது மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் சுழற் கேடயமும் நினைவுப் பரிசுடன் பாராட்டுச் சான்றும் வழங்கவுள்ளார்கள். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் இதற்கான விருதினை தற்போது பெறவுள்ளனர்.

<u>முதல் நிலை சிறப்பு வசூல் கேடயம்</u>

விழுப்புரம் மாவட்டம் : இலக்கு ரூ.14.33 இலட்சம்

வசூல் ரூ.53.47 இலட்சம்

சதவீதம் 373.13%

முனைவர் ஆர். பழனிச்சாமி, இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களை இந்த கேடயத்தை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். அவருக்கு இதற்கான நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுக் கடிதமும் வழங்கப்படுகிறது.

<u>இரண்டாவது நிலை சிறப்பு வசூல் கேடயம்</u>

நாகப்பட்டினம் மாவட்டம் : இலக்கு ரூ.10.14 இலட்சம்

வசூல் ரூ.31.50 இலட்சம்

சதவீதம் 310.68 %

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. முனியநாதன், இ.ஆ.ப., அவர்களை இதற்கான கேடயத்தையும் நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுக் கடிதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

<u>அதிக பட்ச வசூலுக்கான சிறப்பு கேடயம்</u>

( Special Shield for Maximum Collection )

சென்னை மாவட்டம் : வசூல் ரூ.135.78 இலட்சம்

( இலக்கு ரூ.95.04 இலட்சம் )

மாவட்ட அளவில் கடந்த 9 ஆண்டுகளாக தொடர்ந்து சென்னை மாவட்டம் அதிக பட்ச வசூல் செய்திடும் மாவட்டமாக இருந்து வருவதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. வெ. ஷோபனா, இ.ஆ.ப., அவர்களை இதற்கான சிறப்பு கேடயம், நினைவுப் பரிசுடன் மேதகு ஆளுநர் அவர்களின் பாராட்டுக் கடிதத்தினை பெற்றுக் கொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

<u>மாநகராட்சியின் சிறப்பு வசூல் கேடயம்</u>

( Best Collection Shield for Corporation )

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி : இலக்கு ரூ.7.15 இலட்சம்

வசூல் ரூ.7.73 இலட்சம்

சதவீதம் 108.04 %

இதற்கான கேடயம், நினைவுப் பரிசு மற்றும் மேதகு ஆளுநர் அவர்களின் பாராட்டுக் கடிதத்தினைப் பெற்றுக் கொள்ள திரு. T.T. பால்சாமி, எம்.ஏ., அவர்களை அன்புடன் அழைக்கிறேன்.

## <u>கொடிநாள் 2008 வசூலில் 200 சதவீதத்திற்கு மேல் வசூல் சாதனை புரிந்த மாவட்டங்களுக்கான சிறப்பு பதக்கம்</u>

படைவீரர் கொடிநாள் 2008 நிதி வசூலில் 200 சதவீதத்திற்கு மேல் வசூல் செய்திட காரணமாக விளங்கிய மாவட்ட ஆட்சியர்களுக்கும்

இதற்கான சிறப்பு பதக்கம் மற்றும் பாராட்டுக் கடிதம் தற்போது வழங்கப்படுகிறது.

இதனைப் பெற்றுக் கொள்ள அலுவலர்களை மேடைக்கு அன்புடன் அழைக்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. சந்தோஷ் கே. மிஷ்ரா, இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் | இலக்கு ரூ.22.83 இலட்சம்<br><br>வசூல் ரூ.64.37 இலட்சம் ( 281.95 % ) |
| 2. | திரு. M. ஜெயராமன், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>திருநெல்வேலி மாவட்டம் | இலக்கு ரூ.18.42 இலட்சம்<br><br>வசூல் ரூ.40.48 இலட்சம் (219.76 %) |
| 3. | திரு. G. பிரகாஷ், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சியர்,<br>தூத்துக்குடி மாவட்டம் | இலக்கு ரூ.16.68 இலட்சம்<br><br>வசூல் ரூ.36.03 இலட்சம் ( 216.00 % ) |

5/5

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.